**பண்டாரகம பிரதேச சபை 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பண்டாரகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் கிடைத்த மூலதன மானியங்களுக்குரிய வருடாந்த காலக் கழிவிற்கு சமமான அளவு மீளாய்வாண்டின் வருமானத்தில் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். பிழைகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன மானியங்கள் சரியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக கிடைத்த ரூபா 9,814,127 ஆன மூலதன மானியம் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் கிடைத்த மூலதன மானியமாக காண்பிப்பதற்குப் பதிலாக மிகையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக பெறுமதிகள் உரித்தாக்கிக் கொள்ளப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 134(1) ஆம் பிரிவு | 2010 இன் பின்னர் புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை வெளியிட்டு ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 154 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற காணிகளின் விற்பனைப் பெறுமதியில் 01 சதவீத வரி சபையினால் அறவிடவேண்டிய இருந்த போதிலும் அதற்கு முரணாக காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். உள்ளபடியான விற்பனை விலையின் அடிப்படையில் 01 சதவீத வரி அறவிடுவதற்காக அறிவிக்கப்படடிருந்தது. இந்த ஏல விற்பனை நிறுவனம் பகுதிகளாக செலுத்தும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றமையால் 01 சதவீத வரி அறவிடும் போது நடைமுறைப் பிரச்சினைகள் காணப்படுகின்றமை. | - மேற்படி - |
| (iii) | 158(அ) பிரிவு | நிலுவை ஆதனவரி அறவிடும் இறுதி படிமுறையாக ஆதனங்களை தடைசெய்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. தற்போது எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுட | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | | ன் 2023.06.30 திகதியின் பின் ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 68,792,224 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 52,741,814 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம ான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 6,686,200 | 7,594,881 | 6,663,491 | 931,390 | 6,880,860 | 6,865,705 | 5,379,839 | 1,485,865 |
| (ii) | வாடகை | 9,818,600 | 5,628,435 | 4,504,119 | 1,124,316 | 10,005,150 | 5,165,464 | 2,728,864 | 2,436,599 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 380,000 | 356,000 | 356,000 | - | 413,000 | 413,000 | 413,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 112,563,300 | 38,691,300 | 17,883,032 | 20,808,268 | 112,138,960 | 8,869,020 | 118,729,212 | 2,278,768 |
| | மொத்தம் | 129,448,100 | 52,270,616 | 29,406,642 | 22,863,974 | 129,437,970 | 21,313,189 | 127,250,915 | 6,201,232 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை 6,916 | 2023.05.31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி அலகுகளில் | நிலுவை வருமானங்களை விரைவாக |

| | | |
|---|---|---|
| ஆக இருந்த போதும் அதில் 4,748 அலகுகளில் மாத்திரம் ஆதனவரி அறவிடப்பட்டிருந்ததுடன் 2,168 அலகுகளில் இருந்து ஆதனவரி அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 495 அலகுகளில் இருந்து ஆதனவரி அறவிடப்பட்டுள்ளது. மேலும் 1,673 அலகுகளில் அறவிட வேண்டி உள்ளது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 04 வீதிகளை நிர்மாணிப்பதற்காக அவசர கொள்வனவுகளாக ரூபா 195,000 பெறுமதியான 10 கீயூப் ABC இனை கொள்வனவு செய்தல் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. | சபை உறுப்பினர்களின் கோரிக்கையின் பிரகாரம் சில வீதிகளின் அபிவிருத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டு ABC பயன்படுத்தப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் முறையான பிரகாரம் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். |
| (ஆ) மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் பராமரிக்கப்பட வேண்டிய வீதிகள் தொடர்பான திட்டமொன்று தயாரித்து அதற்காக அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் அவ்வாறின்றி மீளாய்வாண்டில் ரூபா 2,851,200 ஆன 80 கோலாஸ் பரல்கள் மற்றும் ரூபா 780,000 ஆன சிப்கல் 40 கியூப் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | சபை அங்கீகாரத்தைப் பெற்று நீர் வழங்கல் சபையினால் நீர் குழாய்களைப் பதிப்பதற்காக சேதமாக்கப்பட்ட வீதிகள் கொரோனாவினால் பழுதுபார்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. உப அலுவலகங்களினால் வழங்கப்பட்டுள்ள வீதி விபரங்களின் பிரகாரம் வீதிகளை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டியிருந்ததுடன் எதிர்காலத்தில் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தப்பட வேண்டிய வீதிகளை இனங்கண்டு திட்டத்தின் பிகாரம் கொள்வனவுகள் செய்யப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கூறுகளாக்கி ஏலம் விடப்பட்ட காணிகளில் ஒதுக்கப்பட்ட வீதிகளின் அளவைக் கணிப்பிட்டு வீதிப் பதிவேட்டில் | தற்போது வீதிகளின் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு வீதிப் பதிவேடு நாளதுவரையாக்கப்படுகின்றது. | வீதிப் பதிவேட்டை நாளதுவரையாகப் பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்காதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் பின்னர் வீதிப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான மயான நிலங்கள் வேலி எல்லை அமைக்கப்படாதிருந்ததுடன் 25 மயான நிலங்களின் உரித்தும் சபைக்குக் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணிகளின் உரித்து பிரதேச செயலாளருக்கு சொந்தமாக இருந்தமையால் அந்தக் காணிகளை முறையாகக் கையேற்கும் வரை பாதுகாப்பு வேலி எல்லையை அடையாளப்படுத்த முடியாதுள்ளது. | காணிகளின் உரித்தை கையேற்று பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூறுவிலை கோருவதற்கு முன் பெறுகைகள் நிறுவனத்தினால் கொள்வனவு செய்வதற்கான கிரய மதிப்பீடொன்று தயாரித்து அதற்காக பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கிக் கொள்ளப்பட்டு வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமல் 04 வளிப் பதனாக்கிகள் ரூபா 977,497 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். சேவையின் தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்தல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணமடைந்த, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 845,590 கடன் மீதி 2023 மே 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஓய்வு பெறச் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் | நிலுவைக் கடன் மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றவர்களுக்கு கடிதம் மூலம் 2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 7,842,000 செலவிடப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் தளத்தை மீளமைத்து கூட்டுப்பசளை உற்பத்தி செய்வதற்கும், சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான செலவினத்தை குறைத்துக் கொள்வது தொடர்பிலும் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2018 இன் போது மில்லனிய பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட போது கழிவுப் பொருள் தளம் மில்லனிய பிரதேச சபைக்கு உரித்தாக இருந்தது. மில்லனிய பிரதேச சபையினால் கழிவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் நிராகரிக்கப்பட்டமையால் வெளி நிறுவனத்திற்கு கழிவுப்பொருட்கள் வழங்கப்பட்டது. தற்போது மில்லனிய பிரதேச சபையினால் உக்குகின்ற கழிவுகள் 3/4 தொன் பெற்றுக் கொள்வதற்கு இணங்கப்பட்டுள்ளது. மிகுதி கழிவுகள் வெளி நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்றது. | வீட்டு ரீதியில் கூட்டுப்பசளை பாத்திரங்கள் போன்றவற்றை வழங்கி உக்குகின்ற கழிவுப் பொருட்களை சேகரித்தலை குறைப்பதற்கும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை கூட்டுப் பசளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். |